Registered as Newspaper

# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

01.12.2020 செவ்வாய்க்கிழமை

## புதினம் தெரியுமோ?

**சா**மானியருக்கு ஒரு சட்டம் சர்வ வல்லமை படைத்தவர்களுக்கு ஒரு சட்டம். கொரோனா தனிமைப்படுத்தலிலும் இவ்வாறான செயற்பாடு பின்பற்றப்படுவதால்தான் யாழ்ப்பாணத்தில் எல்லாமே குழப்பமாகியுள்ளது. 02

# இலங்கையில் போர்க்குற்றம் பிரிட்டனில் விசாரணை ஆரம்பம்



1980ஆம் ஆண்டுகளில் விசேட அதிரடிப்படையினருக்கு பயிற்சி அளித்த பிரிட்டன் கீனி மீனி சேவை என்ற தனியார் பாதுகாப்பு படையினர்.

லண்டன், டிசெ. 1

இலங்கைப் போரில் ஈடுபட்ட பிரிட்டன் கூலிப்படையினர் போர்க் குற்றங்களில் ஈடுபட்டது தொடர்பான குற்றச்சாட்டுகளை லண்டன் பெருநகர பொலிஸார் விசாரிக்கத் தொடங்கியுள்ளனர் என பி.பி.சி. செய்திச் சேவை செய்தி வெளியிட்டுள்ளது. 02

புயல் அச்சம்

## கிழக்கில் பாடசாலைகள் 3 நாள்கள் மூடல்

கொழும்பு, டிசெ. 1

கிழக்கு மாகாண பாடசாலைகள் அனைத்தும் நாளை புதன்கிழமை தொடக்கம் வரும் வெள்ளிக்கிழமை வரை மூடப்படுகிறது என மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் அறிவித்துள்ளார். சீரற்ற காலநிலை 02



## மஹர சிறைக் கலவரம் திட்டமிடப்பட்ட சம்பவம்

பொலிஸ் பேச்சாளர் தகவல்

கொழும்பு, டிசெ. 1

மஹர சிறைக் கலவரத்தின் பிரதான சூத்திரதாரியைக் கண்டறிந்துள்ளோம் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித் 02

## தாழமுக்கம் புயலாக மாறுவதற்கு வாய்ப்பு

வளிமண்டலவியல் திணைக்களம்



கொழும்பு, டிசெ. 1

தென்கிழக்கு வங்காள விரிகுடாவில் உள்ள குறைந்த அழுத்த பகுதி திருகோணமலைக்கு தெற்கே 450 கி.மீ. தூரத்தில் தீவிரமடைய வாய்ப்புள்ளது. இதனால் அடுத்த 12 மணிநேரத்தில் இது ஒரு புயலாக மேலும் தீவிரமடைய வாய்ப்புள்ளதுடன் வடமேற்கு நோக்கிச் செல்லும். இது திருகோணமலை ஊடாக பிரவேசித்து வவுனியா 02

## வடக்கில் குறைந்தளவு மழைவீழ்ச்சியே பதிவு

யாழ்ப்பாணம், டிசெ. 1

வடக்கு மாகாணத்தில் நேற்றுக் காலை 8.30 மணியிலிருந்து இன்று காலை 8.30 மணி வரையிலான 24 மணி நேரத்தில் மிகக் குறைந்த அளவு மழை வீழ்ச் 02



## ஒதியமலை படுகொலையின் 36 ஆம் ஆண்டு நினைவேந்தல்

முல்லைத்தீவு, டிசெ.1

முல்லைத்தீவு, ஒதியமலை கிராமப் படுகொலையின் 36 ஆம் ஆண்டு நினைவு நாள் நாளை முன்னெடுக்கப்படவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைக் கிராமமான ஒதியமலை கிராமத்தில் 1984 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 2 ஆம் திகதி நுழைந்த ஆயுதம் 02

## பிற்போடப்பட்டது க.பொ.த. சா/த பரீட்சை

கல்வி அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 1

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையை திட்டமிட்ட தினத்தில் ஆரம்பிக்க முடியாது எனக் கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். பரீட்சையை நடத்துவதற்கான திகதி, சுமார் 6 வாரங்க 02

## 15 - 24 வயதினரிடையே எச்.ஐ.வி. அதிகரிப்பு

சுகாதார மேம்பாட்டு பணியகம் தகவல்

கொழும்பு, டிசெ. 1

இலங்கையில் 15 தொடக்கம் 24 வயதுப் பிரிவினரிடையே எச்.ஐ.வி. தொற்று அதிகரித்துள்ளது என சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் பணிப்பாளர் பலித கருணா பேமா தெரிவித்துள்ளார். சர்வதேச எய்ட்ஸ் 02

## ஜனாஸா எரிப்புக்கு எதிரான மனுக்கள் மன்றால் தள்ளுபடி

கொழும்பு, டிசெ. 1

கொரோனாவால் உயிரிழந்தவர்களின் சடலங்களை தகனம் செய்வதனைக் கட்டாயப்படுத்தும் வர்த்தமானி அறிவிப்பை ரத்து செய்யக் கோரும் மனுக்களை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

கொரோனாவால் பாதிக்கப்பட்ட மக்களின் உடல்களைத் தகனம் செய்ய வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பை எதிர்த்து முன்னாள் அமைச்சர் 02

கொரோனாவால் வேலை இழப்பு

## சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமிழ் இளையோரை கவரும் இராணுவம்

படைகளில் இணையுமாறு ஆசையூட்டுகிறார் தளபதி 02

சுடர் ஒளி
மாலைப்பதிப்பு

# இலங்கையில் போர்க்குற்றம்...

1980ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் தமிழ் இயக்கங்களை எதிர்த்துப் போராடுவதற்கு, இலங்கைப் பொலிஸாரின் ஒரு பிரிவினருக்கு அதாவது விசேட அதிரடிப் படையினருக்கு பயிற்சி கொடுத்தது தனியார் பாதுகாப்பு நிறுவனமான கீனி மீனி.

இந்த அதிரடிப்படையினர், போரின்போது நடந்த பல மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டனர் எனக் குற்றம்சாட்டப்பட்டுள்ளனர். இதில், தமிழ் மக்களை விசாரணையே இல்லாமல் கொலை செய்த குற்றங்களும் அடக்கம்.

பிரிட்டனில் போர் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் பற்றி விசாரிக்கும் பொறுப்பு, பெருநகரப் பொலிஸாரின் அதிகாரத்துக்கு உட்பட்டதாகும். முதல் முறையாக பிரிட்டனைச் சேர்ந்த கூலிப் படையினரின் அயல்நாட்டுச் செயல்பாடு தொடர்பாக விசாரணை நடத்துவது இதுவே முதல் முறை என நம்பப்படுகிறது.

போரின்போது, பிரிட்டனைச் சேர்ந்த கூலிப்படையினர் போர்க் குற்றங்களைச் செய்தனர் என கடந்த மார்ச் மாதம் பெருநகரப் பொலிஸாருக்கு சில தகவல்கள் கிடைத்தன. அதைமதிப்பிட்ட பின், விசாரணைகளைத் தொடங்கியுள்ளோம் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

பிரிட்டன் அரசு இதுவரை காலமும் ரகசியமாக வைத்திருந்த ஆவணங்களை ரகசியமற்ற ஆவணங்களாக அண்மையில் வகைப்படுத்தியது. அதே போல பில் மில்லர் என்ற ஊடகவியலாளர் தகவல் சுதந்திரத்தின் கீழ் சேகரித்த பல தரவுகளைத் தொகுத்து, புத்தகம் ஒன்றை கடந்த ஜனவரி மாதம் வெளியிட்டார்.

இவைதான் பிரிட்டனின் கே.எம்.எஸ் தனியார் கூலிப் படையினர், இலங்கை உள்நாட்டுப் போரில் ஈடுபட்டு இருக்கின்றனர் என்பதற்கான ஆதாரங்களை வெளிச்சத்துக்கு கொண்டு வந்துள்ளன.

'1980ஆம் ஆண்டுகளில் கே.எம்.எஸ் படையினர் இலங்கையில் இருந்த நேரத்தில், பல தமிழ் மக்கள் பிரிட்டனில் அகதிகளாக வந்தனர்' என்கிறார் பில் மில்லர்.

அந்தக் காலங்களில் உலங்கு வானூர்திகளில் பொருத்தப்பட்டிருந்த தானியங்கி துப்பாக்கிகளால் மக்கள் சுடப்பட்டதைப் பார்த்ததை இப்போதும் சிலர் நினைவு கூர்கிறார்கள். அத்தகைய தாக்குதல்களின்போது, அந்த உலங்கு வானூர்திகளை இயக்கியது பிரிட்டனைச் சேர்ந்த கூலிப் படையினர்தான் என்பது தெரிய வரும் போது இந்த தகவல்கள் பலரையும் அதிர்ச்சி அடைய வைத்திருக்கின்றன என்கிறார் மில்லர். (ஓ,இ)

## கிழக்கில்...

காரணமாக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டார்.

வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் புயலாக மாறி அடுத்த 24 மணிநேரத்தில் கிழக்கு மாகாணம் ஊடாக முல்லைத்தீவைக் கடந்து செல்லும் என்று வளிமண்டவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது. (ஒ,இ)

## வடக்கில்...

சியே பதிவாகியுள்ளது.

திருநெல்வேலி 14.8 மி.மீ., அச்சுவேலி 10.2 மி.மீ., யாழ்ப்பாணம் 18 மி.மீ., சாவகச்சேரி 17.4 மி.மீ., நெடுந்தீவு 11.3 மி.மீ.,

அக்கராயன் 1.5 மி.மீ., ஒட்டுசுட்டான் 3.8 மி.மீ., மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. (ஒ,5)

## தாழமுக்கம்...

மன்னார் ஊடாக இலங்கையை விட்டு வெளியேறும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்தக் காலப்பகுதியில், தற்காலிக வீடுகள் மற்றும் கட்டிடங்களின் கூரைகள் பாதிப்படைதல், மின்சார இணைப்புக்கள் பாதிப்படைதல், மரங்களின் ஆபத்தான கிளைகள் முறிதல், கடல்நீர் தாழ்நிலங்களுக்குள் ஊடுருவல், கன மழை காரணமாக திடீர் வெள்ள நிலைமைகள் ஏற்படலாம்.

எனவே மக்கள் தமது வீடுகளுக்கு அருகில் உள்ள பாதுகாப்பற்ற மரக் கிளைகளை அகற்றுவதுடன் பாதுகாப்பான இடங்களில் இருக்குமாறு வேண்டப்படுகின்றனர். (ஒ,இ)

## மஹர சிறைக்...

துள்ளார். கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு அவர் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

மஹர சிறைச்சாலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற சம்பவம் நன்கு திட்டமிடப்பட்ட ஒன்று.

இதன் பிரதான சூத்திரதாரியைக் கண்டறிந்துள்ளோம். மஹர சிறைச்சாலை மருத்துவமனையில் பணியாற்றும் ஊழியர் ஒருவரே இதன் சூத்திரதாரி. கைதிகள் நன்கு திட்டமிட்டு, பதிவேட்டு அறையை தீ வைத்துக் கொளுத்தியுள்ளனர், என்றார். (ஒ,5)



## ஒதியமலை....

தாக்கிய காடையர்கள் அங்கிருந்த 32 பேரைச் சுட்டுக் கொன்றனர்.

இந்தப் படுகொலையை நேரில் பார்த்த, அந்தக் கிராமத்தைச் சேர்ந்த கந்தசாமி அந்த கொடூர சம்பவத்தைப் பற்றி தெரிவிக்கையில்,

அன்று அதிகாலை வேளை எங்கள் கிராமத்துக்குள் நுளைந்த காடையர்கள் எங்கள் வீடுகளில் உள்ள ஆண்களை அழைத்து சனசமூக நிலையத்தில் ஒன்றுகூடுமாறு அழைத்தனர். 32 ஆண்களையும் ஒன்றாக சனசமூக நிலையத்தில் அழைத்து அனைவரின் தலையிலும் துப்பாக்கியால் சுட்டார்கள்.

இறந்தவர்கள் அனைவரையும் ஒன்றாகச் சேர்த்து மரண விசாரணை அதிகாரியை அழைத்து விசாரணையின் பின்னர் சடலங்கள் அனைத்தையும் அருகில் உள்ள மரம் ஒன்றின் கீழ் அனைவரையும் அடுக்கி ஒரே தடவையில் இறுதிக் கிரியைசெய்து எரித்தோம். ஒரு தலைமுறையை வளர்க்கக்கூடிய ஆண்களை இந்த கிராமத்தில் இருந்து தொலைத்துள்ளோம்.

இது அரசாங்கத்தின் திட்டமிட்ட இனஅழிப்பு நடவடிக்கை. இந்தப் படுகொலையைச் செய்வதற்காக முதல் நாள் இரவே ஆயுதம் தரித்தவர்கள் வந்து தங்கியிருந்துள்ளனர் என்றார்.

நாங்கள் மீள்குடியேற்றப்பட்டு ஏழு ஆண்டுகள் கடந்து விட்டன. ஆனால் எங்கள் கிராமத்துக்கு அருகில் உள்ள பெரும்பான்மை இன கிராம மக்கள் அனைத்து வசதிகளுடனும் மீள்குடியேற்றப்பட்டுள்ளார்கள். எங்கள் கிராமத்துக்கு தான் இன்னும் எதுவித வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (ற-19)

## புதினம் தெரியுமோ?

**கொழும்பிலிருந்து அமைச்சர்கள் பட்டாளத்தை அழைத்து, இங்குள்ள அதிகாரிகளுடன் மிக நெருக்கமாக 'ஏ.சி.' அறையில் யாழ்ப்பாண மாவட்டச் செயலர் மகேசன் தலைமையில் மாவட்டச் செயலகத்தில் கூட்டம் நடத்தியிருக்கின்றார்கள். இன்னும் கூட்டங்கள் நடத்த இருக்கின்றார்கள்.**

**கொழும்பிலிருந்து வருவோர் அதுவும் அதி உயர் அபாயப் பிரதேசங்களிலிருந்து வருவோர் தனிமைப்படுத்தப்படுவது கட்டாயம் என்றபோதும் இங்கே அமைச்சர்கள் உள்ளிட்ட உயர் மட்டத்தினர் வந்தபோது அவர்களைத் தனிமைப்படுத்தாது, அவர்கள் முன்பாக இங்குள்ள அதிகாரிகள் தங்கள் முதுகை கூனி குனிந்து நின்று வரவேற்றார்கள்.**

**இது இங்குள்ள பொதுமக்கள் மத்தியில் கேள்வி ஒன்றை எழுப்பியிருந்தது. அமைச்சர்கள் பட்டாளம் தனிமைப்படுத்தலின்றி சுதந்திரமாக வந்து செல்லலாம் என்றால் தாம் வந்து சென்றால் என்ன என்பதே அந்தக் கேள்வி. அதன் விளைவுதான் காரைநகர் தொற்றாளர் கொழும்பிலிருந்து வந்தபோதும் சுகாதார அதிகாரிகளுக்கு அறிவிக்கவில்லை. அவரால் இப்போது யாழ்ப்பாணம் அல்லோலகல்லோலப்படுகின்றது. இதற்கு காரணம் அந்தத் தனி மனிதனின் பொறுபற்றதனம் என்று சாடிய சுகாதார சேவைகள் பணிப்பாளர், கொழும்பிலிருந்து வந்த அமைச்சர்கள் பட்டாளத்தை தனிமைப்படுத்தாத தான் உள்ளிட்ட அதிகாரிகளின் செயற்பாட்டை எப்படிச் சொல்லப் போகின்றார்?**

**தற்போது இன்னொரு பிரச்சினையையும் அதிகாரிகள் உருவாக்கியிருக்கின்றனர்.**

**ஜா எல பிரதேசத்திலிருந்து யாழ்ப்பாண மாவட்ட பிரதம தபால் அதிபர் கடந்த வாரம் கடமைக்கு வந்திருக்கின்றார். அவர் தனிமைப்படுத்தப்படவில்லை. நேரடியாக கடமைக்குச் சென்றுள்ளார். அங்குள்ள ஊழியர்கள் மத்தியில் சலசலப்பு. இது தொடர்பில் சுகாதாரத்துறையினருக்கு அறிவிக்கப்பட்டு அவர்கள் தனிமைப்படுத்தப்பட நடவடிக்கை எடுத்தனர். ஆனால் மேல் மட்டம் வரையில் இந்த விடயத்தை அவர் கொண்டு சென்றதும், மாவட்டத்தின் மேல் நிலை அதிகாரி உள்ளிட்ட பலர் அவரை தனிமைப்படுத்தலிருந்து விடுவித்தனர்.**

**இப்போது அவர் கடமைக்குச் செல்கின்றார். அவர் பொதுமக்களையோ, அதிகாரிகளையோ சந்திக்காமல் அலுவலக அறையிலிருந்து வேலை பார்ப்பாராம். அதனால் தனிமைப்படுத்தல் தேவையில்லை என்று அதிகாரிகள் சப்பைக்கட்டு கட்டுகின்றனர்.**

**இதுவே சாதாரண பொதுமகன் ஒருவனுக்கு இவ்வாறான விட்டுக் கொடுப்புக்களை சுகாதார அதிகாரிகள் செய்வார்களா? அன்றாடம் கூலித் தொழிலுக்குச் சென்றாலே அடுப்பெரியும் வீடுகளுக்கு பாய்ந்தடித்துச் சென்று, கொரோனாத் தொற்றாளருடன் தொடர்புடையவர்கள் என்று தனிமைப் படுத்தும் அதிகாரிகள் இவ்வாறான மேல் நிலை அதிகாரிகள் முன்பாக குனிந்து மண்டியிடுவது ஏன்?**

**இவ்வாறான பாகுபாடுகளால்தான், கொழும்பிலிருந்து வரும் தொற்றாளர்கள் மாவட்டத்துக்குள் சர்வசாதாரணமாக உலாவ முடிகின்றது. தனிமனிதனின் நடத்தையை பொறுப்பற்றதனம் என்று சாடும் அதிகாரிகள் தங்கள் பக்கத்தில் உள்ள கையாலாகத் தனத்தையும் கவனித்துக் கொண்டால் சரி.**

பட்சி

# சந்தர்ப்பத்தை.....

கொழும்பு, டிசெ. 1

கொரோனா காரணமாக பல இளைஞர்கள் வேலைகளை இழந்துள்ளார்கள். அவர்களும் இராணுவத்தில் இணைந்து கொள்ளலாம். இராணுவத்தில் இணைந்தால் பல வசதிகளைப் பெற்றுக் கொள்ளலாம். எனவே தமிழ் இளையோர் இராணுவத்தில் இணைந்து பணியாற்ற முன்வரவேண்டும் என்று யாழ்ப்பாண மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் செனரத் பண்டார தெரிவித்துள்ளார்.

இராணுவத்துக்கு இளையோரை இணைக்கும் தேசிய ரீதியான வேலைத் திட்டத்தில், யாழ்ப்பாண மாவட்ட இளையோரை இணைப்பது தொடர்பில் விளக்கமளிக்கும் கூட்டம் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் இன்று காலை நடைபெற்றது. இதன்போது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இராணுவத்தில் உள்ள 90 வேலைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த ஒரு சிலரே இராணுவத்தில் தற்போதுள்ளனர். இராணுவத்தில் இலங்கையில் எந்தப் பாகத்திலிருந்தும் எவரும் இணைய முடியும்.

கொரோனா சூழல் காரணமாக பல இளைஞர்கள் வேலை இல்லாமல் உள்ளனர். தனியார் துறையில் பணியாற்றிய பலர் கொரோனாவால் வேலைகளை இழந்துள்ளனர். இவர்கள் இப்போதுள்ள சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தவேண்டும்.

இராணுவத்தில் இணைந்து பணியாற்றுவது ஏனைய அரச வேலைகளை விடச் சிறப்பானது. ஓய்வூதியம் உள்ளிட்ட பல வசதிகள் உள்ளன.
இராணுவத்தில் உள்ள விவசாயத்துறை சார்ந்த வெற்றிடங்களுக்கு விண்ணப்பிக்குமாறு யாழ்ப்பாண இளைஞர்களிடம் கோரிக்கை விடுக்கின்றேன்.

இராணுவத்துக்கு ஆள் சேர்க்கும் இந்தத் திட்டம் தொடர்பில் கிராம அலுவலர்கள் வீடு வீடாகச் சென்று தெளிவுபடுத்த வேண்டும்.

நான் இங்குள்ள இளையோருக்கு ஒரு விடயத்தைக் கூறுகின்றேன். நான் இராணுவத்தில் இணைந்தபோது எனக்கு வழிகாட்டியாக இருந்தவர் கப்டன் தரத்தைச் சேர்ந்த மகேந்திரன் என்ற தமிழ் அதிகாரி. எல்லோரும் இணைவதன் ஊடாகவே நாட்டை அபிவிருத்தி செய்ய முடியும்.

1982ஆம் ஆண்டு நான் பரீட்சை எழுதும் போது இலங்கை அபிவிருத்தியடைந்து வரும் நாடு என்று எழுதினேன். எனது மகன் 2012ஆம் ஆண்டு பரீட்சை எழுதும் போது இலங்கை அபிவிருத்தியடைந்து வரும் நாடு என்று எழுதுகின்றான். எங்களின் எதிர்கால சந்ததியும் அபிவிருத்தியடைந்து வரும் நாடு என்றுதான் எழுதப் போகின்றதா? அதனை அனுமதிக்கப் போகின்றோமா இல்லையா என்பது எங்கள் எல்லோரின் கைகளிலும்தான் உள்ளது.

கடந்த 30ஆண்டு காலப் போரினால் அனுபவித்ததை நாம் மறப்போம். இனி அனைவரும் ஒன்று சேர்ந்து நாட்டை முன்னேற்றுவோம், என்றார். (ஓ,111)

## மஹர சிறைச்சாலை களேபரம்:

# சாவடைந்தோர் 9 ஆக அதிகரிப்பு காயமடைந்தோர் 109 ஆக உயர்வு

கொழும்பு, டிசெ. 1

மஹர சிறைச்சாலையில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட களேபரத்தில் உயிரிழந்த கைதிகளின் எண்ணிக்கை மேலும் அதிகரித்துள்ளது.

காயமடைந்து, ராகம மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த கைதி ஒருவர் இன்று காலை உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 9ஆக அதிகரித்துள்ளது. காயமடைந்தோரின் எண்ணிக்கை 109ஆக அதிகரித்துள்ளது.

காயமடைந்தவர்களில் இரண்டு அதிகாரிகளும் அடங்குகின்றனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

சிறையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த குற்றவாளிகள் மற்றும் சந்தேகநபர்கள் ஆகியோருக்கிடையிலும் மோதல் ஏற்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்தநிலையில், இன்று அதிகாலையும் சில கைதிகள் காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஓ,22)

# விசாரணைக் குழுவில் என்னை உள்ளடக்கவேண்டாம்

## பொலிஸ் பேச்சாளர் கோரிக்கை

கொழும்பு, டிசெ. 1

மஹர சிறைச்சாலையில் ஏற்பட்ட அசம்பாவிதம் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு நீதி அமைச்சர் அலிசப்ரியால் நியமிக்கப்பட்ட ஐவரடங்கிய குழுவிலிருந்து, பொலிஸ் ஊடகப்பேச்சாளரும், பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண விலகியுள்ளார். தனக்கு பதிலாக புதிய அதிகாரி ஒருவரை நியமிக்குமாறுகோரி பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண, நீதி அமைச்சருக்கு இன்று கடிதம் அனுப்பி வைத்துள்ளார். இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அஜித் ரோஹண,

மஹர சிறைச்சாலை சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நீதி அமைச்சரால் நியமிக்கப்பட்ட குழுவில் எனது பெயரும் உள்ளடக்கப்பட்டுள்ளது. என்னை நீக்கிவிட்டு அந்த இடத்துக்கு புதியவர் ஒருவரை நியமிக்குமாறு நீதி அமைச்சரிடம் நான் எழுத்துமூலம் இன்று கோரிக்கை விடுத்துள்ளேன்.

நான் பொலிஸ் ஊடகப்பேச்சாளராக செயற்படுகின்றேன். ஊடகங்களுக்கு அடிக்கடி தகவல்களை வழங்கவேண்டும். சிலவேளை இக்குழுவில் இடம்பிடித்தால் கருத்து வெளியிடுவதற்கு அது தடையாக இருக்கலாம். அதேபோல ஏனையோர் இது தொடர்பில் கேள்வி எழுப்பலாம். இவை உள்ளிட்ட காரணிகளைக் கருத்திற்கொண்டே இந்த முடிவை எடுத்தேன். இது தொடர்பில் நீதி அமைச்சர் சாதகமாக பரிசீலிப்பார் என நம்புகின்றேன், என்றார். (ஓ,44)

# பிற்போடப்பட்டது....

ளுக்கு முன்னரே அறிவிக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் தற்போது காணப்படுகின்ற அசாதாரண சூழ்நிலைக்கு மத்தியில், ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையை நடத்துவதற்கான சூழல் கிடையாது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

2020ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையை அடுத்த வருடம் ஜனவரி மாதம் 18ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை நடத்துவதற்கு கல்வி அமைச்சு ஏற்கனவே திட்டமிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ,22)

# 15 - 24 வயதினரிடையே....

தினத்தை முன்னிட்டு நேற்றுமுன்தினம் நடத்திய ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.

2019ஆம் ஆண்டில் 439 பேர் எச்.ஐ.வி. தொற்றுடன் புதிதாக இனம் காணப்பட்டுள்ளார்கள். அவர்களில் 359பேர் ஆண்களாகும். இலங்கையின் மொத்த சனத்தொகையில் ஒரு சதவீதத்துக்கும் குறைவானோரே எய்ட்ஸ் தொற்றாளர்களாக உள்ளனர்.

ஆனாலும் அண்மைக் காலமாக எய்ட்ஸ் நோயாளிகளின் எண்ணிக்கை இலங்கையில் அதிகரித்த போக்கில் செல்கின்றது.

பாதுகாப்பற்ற உறவு மற்றும் ஆண்களுக்கு இடையேயான ஓரினச் சேர்கையின் ஊடாகவுமே இலங்கையில் அதிகளவு பரவுகின்றது, என்று தெரிவித்தார். (ஓ,5)

# ஜனாஸா எரிப்புக்கு....



ரிசாத் பதியுதீன் உள்பட பல தரப்பினரால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுக்களை நிராகரித்து உயர் நீதிமன்றம் இன்று கட்டளையிட்டது.

பிரதம நீதியரசர் ஜெயந்த ஜெயசூரியா தலைமையில் மூன்று நீதியரசர்கள் கொண்ட உயர் நீதிமன்ற அமர்வு இன்று இந்தக் கட்டளையை வழங்கியது.

பிரதம நீதியரசர் ஜெயந்த ஜெயசூரியா, முர்டு பெர்னாண்டோ, பிரீத்தி பத்மன் சுரசேன ஆகியோர் அடங்கிய மூன்று நீதியரசர்கள் கொண்ட உயர் நீதிமன்ற அமர்வு முன் இன்று இந்த மனுக்கள் விசாரணைக்கு வந்தன.

இந்த மனுவில் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியராச்சி, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், சுகாதார அமைச்சின் செயலர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

கொரோனாவால் இறந்தவர்களின் உடல்களை எவ்வாறு கையாள்வது என்றும், அதன்படி இறந்தவர்களின் உடல்களைத் தகனம் செய்ய வேண்டும் என்றும் கூறி 2020ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11 ஆம் திகதி சுகாதார அமைச்சரால் வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டது என மனுதாரர்கள் மனுவில் தெரிவிக்கப்பட்டது. இருப்பினும், உலக சுகாதார அமைப்பு வெளியிட்டுள்ள வழிகாட்டுதல்களின் படி, அத்தகைய உடல்களை தகனம் செய்யலாம் அல்லது அடக்கம் செய்யலாம். இருப்பினும், இந்த நாட்டில் இறந்தவர்களின் உடல்களை தகனம் செய்வது முஸ்லிம்களின் மத நம்பிக்கைகளுக்கு எதிரானது என்று மனுதாரர்கள் மனுவில் சுட்டிக்காட்டியிருந்தனர்.

மனுதாரர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனும் முன்னிலையாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ,இ)

# வவுனியாவில் யானைகள் அட்டகாசம்

## மாவட்டச் செயலர் நேரடி விஜயம்





வவுனியா, டிசெ.1

வவுனியா தெற்கு சிங்கள பிரதேச செயலக பிரிவுக் குட்பட்ட அலகல்ல பகுதியில் யானைகள் அட்டகாசத்தால் தாம் அச்சத்துடன் வாழ்ந்து வருகின்றோம் என அப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த சில நாள்களாக தினமும் அப் பகுதிக்கு வருகை தரும் காட்டு யானைகள் கிராமத்தி லுள்ள நெற்பயிர்கள், தென்னைந்தோட்டம், வாழைத்தோட்டம் என்பவற் றைச் சேதப்படுத்தி வருவது தொடர்பில் அப்பகுதி மக்க ளால் அரச அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டுசெல லப்பட்டது.

இதனையடுத்து நேற்று திங்கட்கிழமை வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் சமன் பந்துலசேன நேரில் சென்று நிலமைகளை பார்வை யிட்டதுடன் விரைவில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார். (ந-18)





# டெங்கை கட்டுப்படுத்த விசேட கருத்தரங்கு

திருகோணமலை, டிசெ.1

ஒட்டமாவடி பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் அதிகரித்து வரும் டெங் குத் தாக்கத்தைத் தொடர்ந்து, ஒட்டமாவடி பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி அலுவ லகத்தில் டெங்கை கட்டுப்படுத்தும் நோக் கில் கருத்தரங்கு ஒன்று நேற்று திங்கட் கிழமை நடைபெற்றது.

ஒட்டமாவடி பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் ஒட்டமாவடி பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எம்.நௌபர், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவி ருத்தி உத்தியோகத்தர்கள், கிராம அதிகாரி கள், பட்டதாரி பயிலுநர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் என பலர் கலந்து கொண்டனர். இதில் டெங்குப் பரவலைத் தடுப்பதற்கான முன்னாயத்த நடவடிக்கை கள், பின்பற்றப்பட வேண்டிய சுகாதார பாதுகாப்பு நடைமுறைகள் மற்றும் பொது மக்களுக்கு எவ்வாறு விழிப்பூட்டல்கள் வழங்குவது, டெங்கு நோய் காரணமாக அதிகம் பாதிக்கப்படும் சிறுவர்களை எவ்வாறு பாதுகாப்பதுத் தொடர்பில் அரச அதிகாரிக ளுக்கு வழங்கப்பட்ட விளக்கங்களை அதிகா ரிகள் மக்களுக்கு சென்றடையச் செய்யுமாறு வேண்டுகோள் வழங்கப்பட்டது. (ந-150)

# 50 வருடங்கள் பழமைவாய்ந்த கோவில் மணி திருடப்பட்டது

சாவகச்சேரி, டிசெ. 1

சாவகச்சேரி நுணாவில் மத்தி நாகபூசணி அம்பாள் கோவிலில் பொருத்தப்பட்டி ருந்த ஐம்பது வருடங்கள் பழமை வாய்ந்த கோவில் மணி இனந்தெரியா தோரால் நேற்று திருடப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் இது தொடர்பில் முறைப்பாடு பதிவுசெய்யப் பட்டுள்ளது. இதேவேளை கோவிலை அண்டிய பகுதியில் வீட்டுவேலை ஒன்றுக்காகப் பறிக்கப்பட்டிருந்த சல்லிக் கல் மற்றும் அங்கிருந்த பொருள்கள் என்பனவும் திருடப்பட்டுள்ளன. இது தொடர்பிலும் முறைப்பாடு பதிவுசெய் யப்பட்டுள்ளது. (ம-9)

# மோட்டார் திணைக்களங்களில் மட்டுப்படுத்தப்பட்ட சேவைகள்

கொழும்பு. டிசெ.1

நாராஹேன்பிட்டி மற்றும் வேரஹெர ஆகிய மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களங்களில் தற்பொழுது முன்கூட்டிய பதிவு சேவை கள் மாத்திரமே இடம்பெறுகின் றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய குறித்த திணைக்களங்கள் முன்கூட்டிய பதிவு சேவைகளை பெற்றுக்கொள் பவர்களின் நன்மை கருதி புதிய தொலைபேசி இலக்கம் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. 011-2 677877 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்துவதன் மூலம் முன்கூட் டிய பதிவுகளை மேற்கொள்ள முடியும் என அந்த திணைக்களம் அறிவித்துள்ளது. (ந-இ)

# சாவ. பிரதேச சபை அமர்வு அகவணக்கத்துடன் ஆரம்பம்

கொடிகாமம், டிச.1

சாவகச்சேரி பிரதேச சபையின் மாதாந்த அமர்வு அக வணக்கத்துடன் நேற்று திங்கட் கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெற்றது.

இரண்டு நிமிட அக வணக்கம் செலுத்தி ஆரம்பமான சபை அமர்வில், “மண்ணின் மடியோடும் கடலின் அடியோடும் கரைந்து போன தேசத்தின் முத்துக்களையும், மண் ணுக்காக மரணித்து இன்னுயிர்களையீன்ற எமது அனைத்து உறவுகளையும் மனதில் நிறுத்தி இரு நிமிடம் அஞ்சலித்து கடவுளை வணங்குவோம்”என தெரிவித்த பிரதேச சபை உறுப்பினர் சி.கஜேன், இரண்டு நிமி டம் சபை அமர்வில் அகவணக்கம் செலுத்த வேண்டும் என பிரேரணை ஒன்றையும் சமர்ப்பித்தார். (ந-159)



## கொரோனாவுக்கு மத்தியில்

# பாடசாலைகளை நடத்துவதில் நடைமுறைப் பிரச்சினைகள்

## வலயக்கல்விப் பணிப்பாளர்கள் தெரிவிப்பு

மட்டக்களப்பு, டிசெ.1

நாட்டில் கொரோனாத் தொற்று அதிகரித்து வரும் நிலையில் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வது தொடர்பான கலந்துரையாடல் நேற்று திங்கட்கிழமை மட்டக் களப்பு மாவட்டச் செயலகத் தில் அரசாங்க அதிபர் கணப திப்பிள்ளை கருணாகரன் தலைமையில் நடைபெற்றது.

அரசாங்கத்தின் சுற்று நிருபத்துக்கமைவாக பாடசா லைகளை நடாத்திச்செல்வதில் சில நடைமுறைப் பிரச்சினை கள் காணப்படுகின்றன. பாட சாலைக்கு வருகின்ற மாணவர் களின் வரவு 40 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது என வல யக்கல்விப் பணிப்பாளர்களால் தெரிவிக்கப்பட்டது.



மாணவர்களை பாடசாலைக்கு அழைக்காமல், வீடுகளில் இருந்து தொலைக்காட்சி மூலம் இடம்பெறுகின்ற கல்வி நடவடிக்கைகளில் ஆர்வம் காட்டுவதற்கு பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் கவனம் செலுத்தவேண்டும் எனவும், இத் தொலைக்காட்சி கல்வி நடவடிக்கையில் மாணவர் களை ஈடுபடுத்துவதற்கு விழிப்புணர்வுகளை ஏற்படுத்து வது சிறந்தது எனவும் ஆலோ சிக்கப்பட்டது.

மேலும், அரசாங்கத்தின் சுற்று நிருபத்திற்கமைவாக பாடசா லைகளை நடாத்திச்செல்ல வேண்டும் என்றும், பாடசா லைகளில் முகக்கவசம் அணி தல் மற்றும் சமூக இடைவெளி பேணுதல் உள்பட சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் எனவும் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர், ஏ. மயூரன் தெரிவித் தார்.

இக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர், மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர், பட்டிருப்பு வலயக் கல்விப்பணிப்பாளர், கல்குடா வலயக் கல்விப்பணிப் பாளர், மட்டக்களப்பு மேற்கு வலயக் கல்விப்பணிப்பாளர் மற்றும் மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப்பணிப்பாளர் ஆகியோரும் கலந்துகொண்டி ருந்தனர். (ந-150)

# 3,000 மரக்கன்றுகள் மன்னாரில் நடுகை





மன்னார், டிசெ. 1

மன்னார் மாவட்டத்தை பசுமையான மாவட்டமாக மாற்றும் நோக்குடன் 3 ஆயிரம் நிழல் மரக்கன்றுகள் நடும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மன்னார் மாவட்டத்தை பசுமையான மாவட்டமாக மாற்றும் நோக்குடன் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனின் வழிகாட்டலில் 'குணரத்தினம் பவுண்டேசனின்' அனுசரணையுடன் 3 ஆயிரம் மரக்கன்றுகள் இந்தத் திட்டத்தில் நடுகை செய்யப்படுகின்றன. மாவட்ட ரீதியில் பல பாடசாலைகள் மற்றும் பொது இடங்கள் இந்தத் திட்டத்துக்காகத் தெரிவுசெய்யப்படுகின்றன. இந்த நிகழ்வில் மடு வலய கல்விப் பணிப்பாளர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (ம-56)

## சுகாதார விதிமுறைகளை பின்பற்றாதவர்கள் கைது!

கொழும்பு, டிசெ. 1

முக்கவசங்கள் அணியாமை மற்றும் பொது இடங்களில் சமூக இடைவெளி பேணாமை ஆகிய குற்றச்சாட்டுக்களுக்காக 32 பேர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஒக்டோபர் மாதம் 30ஆம் திகதி முதல், தனிமைப்படுத்தப்பட்ட விதிமுறைகளை மீறியதற்காக 934 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண குறிப்பிட்டுள்ளார். நாட்டில் கொரோனா தொற்றின் பரவலைக் கட்டுப்படுத்த அதிக ஆபத்து உள்ள பகுதிகளில் விதிக்கப்பட்ட பயணக் கட்டுப்பாடுகளுக்கு பொதுமக்கள் இணங்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். (ம-44)

## வளி மண்டல திணைக்கள வீதியை சீர்படுத்துங்கள்!

### மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.1

யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் அமைந்துள்ள யாழ். மாவட்ட வளி மண்டலவியல் திணைக்களத்துக்குச் செல்வதற்கு உகந்த வீதி வசதிகள் இன்மையால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இடர்காலங்களின் போது, பொது மக்களுக்குத் தேவையான அவதானிப்புத் தகவல்களையும், தகுந்த முன்னெச்சரிக்கையையும் வழங்குவதில் யாழ்ப்பாணத்திலுள்ள யாழ். மாவட்ட வளி மண்டலவியல் திணைக்களம் பெரும் பங்காற்றி வருகின்றது.

ஆனால், அந்தத் திணைக்களத்துக்குச் செல்வதற்கு உரிய பாதை இல்லாத காரணத்தால் அங்கு பணியாற்றும் பணியாளர்கள், அனர்த்த முன்னெச்சரிக்கை செய்தி சேகரிப்புக்குச் செல்லும் ஊடகவியலாளர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். சுமார் 400 மீற்றர் நீளமான மிகக் குறுகிய பாதையின் இரு மருங்கிலும் பற்றை காணப்படுவதுடன், ஒற்றையடிப் பாதை போன்றும் தோற்றமளிக்கின்றது. ஒவ்வொரு காலப் பகுதியிலும், அந்தப் பாதையை சீர்செய்துதருமாறு அரசியல் தலைவர்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டு வருகின்ற நிலையில், அந்தப் பாதை தொடர்பில் அக்கறை கொள்வோர் எவருமில்லை என்று விசனம் வெளியிடப்பட்டுள்ளது.(ற-20)



## நிகழ்வுகளை தவிருங்கள்!

### வைத்தியர் பாலித்த கருணாபேம கோரிக்கை

கொழும்பு. டிசெ.1

நாட்டின் தற்போதைய நிலையில் நிகழ்வுகளை ஏற்பாடு செய்வதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு சுகாதார மேம்பாட்டு அலுவலகத்தின் பணிப்பாளர் விசேட வைத்தியர் பாலித்த கருணாபேம நாட்டு மக்களிடம் கோரியுள்ளார்.

மேலும், பண்டிகை காலப்பகுதியில் கடைகளுக்குச் செல்வதை அத்தியாவசிய தேவைகளுக்கு மாத்திரம் வரையறுத்துக்கொள்ளுங்கள். வர்த்தக நிலையங்களுக்கு வீட்டில் இருந்து ஒருவர் மாத்திரம் செல்வது பொருத்தமானதாகும். இது தொடர்பில் வீட்டில் உள்ள அனைவரும் தற்போதைய நிலைமையை உணர்ந்து செயற்படவேண்டும்.

பொதுமக்கள் பொறுப்புடன் செயற்படுவதன் மூலமே வைரஸ் தொற்று பரவுவதைக் கட்டுப்படுத்த முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ந-இ)

## விளக்கீட்டுக்கு இடையூறு விளைவித்தது விசமத்தனம்

### கிளிநொச்சி சின்மயா மிசன் ஆச்சாரியார் தெரிவிப்பு!

கிளிநொச்சி, டிசெ.1

கார்த்திகை விளக்கீட்டில் இடையூறு விளைவித்த விசமிகளின் செயல் கண்டனத்துக்குரியது என்று கிளிநொச்சி சின்மயா மிசன் ஆச்சாரியார் சுவாமி சிவேந்திர சைதன்யா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று அவர் ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

கிளிநொச்சி பரந்தனில் நேற்றுமுன்தினம் கார்த்திகை விளக்கீட்டுக்கு இடையூறு விளைவித்ததை கண்டித்தே இந்த ஊடக சந்திப்பு இடம்பெற்றது.(ற-6)

ஐ – ரோட் வீதிகள்

## இரண்டு மாதங்களுக்குள் முடிவுறுத்தப் பணிப்புரை

### அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 1

கடந்த அரசின் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட ஐ ரோட் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டு வரும் வீதிகளில், முடிவுறாத பணிகளை இரண்டு மாதங்களுக்குள் முடிக்குமாறு ஒப்பந்தகாரர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளேன். அவ்வாறு முடிக்கப்படாதபட்சத்தில் அந்தப் பணிகளை வீதி அபிவிருத்தி அதிகாரசபை பொறுப்பேற்கும். இவ்வாறு பெருந்தெருக்கள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஒரு லட்சம் கிராமிய வீதிகளை அமைக்கும் பணிகளை நாம் கடந்த ஆண்டு ஆரம்பித்திருந்தோம். இதுவரை 12 ஆயிரம் கிலோ மீற்றர் வீதிகளை புனரமைத்துள்ளோம். எஞ்சிய 88 ஆயிரம் கிலோ மீற்றர் நீளமான வீதிகளை எதிர்வரும் 4 ஆண்டுகளுக்கு முடிவுறுத்துவோம், என்று அமைச்சர் குறிப்பிட்டார். (ஒ.5)



## மீன்பிடி வலையில் சிக்கிய எட்டு ஆமைகள் விடுவிப்பு!

மன்னார், டிசெ.1

மன்னார் கடற்பிராந்தியத்தில் மீன்பிடி வலையில் சிக்கிய 8 கடல் ஆமைகள் கடந்த சனிக்கிழமை மாலை கடற்படையினரால் மீட்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளன. மன்னார் தெற்கு கடல் பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்ட கடற்படையினர், மீன் வலையில் கடல் ஆமைகள் சிக்கியிருப்பதை அவதானித்தனர்.

இதையடுத்து இந்த ஆமைகள் வலையில் இருந்து மீட்கப்பட்டு மீண்டும் கடலில் விடப்பட்டன. (ற-56)

# மஹர சிறைச்சாலையின் பாதுகாப்பு பலப்பட்டது!

கொழும்பு, டிசெ. 1

மஹர சிறைச்சாலையில் ஏற்பட்ட களேபரத்தை அடுத்து, இன்று அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. சிறைச்சாலையில், மீதமிருந்த கைதிகளில் சிலர், வெவ்வேறு சிறைகளுக்கு இன்று காலை அழைத்துச் செல்லப்பட்டனர்.

சம்பவத்தை கேள்வியுற்ற கைதிகளின் உறவினர்கள் உள்ளிட்ட பலரும், சிறைச்சாலைக்குச் செல்லும் வீதியின் இரு மருங்கிலும் நின்றிருந்தனர். அதில், பெரும்பாலானவர்கள், சிறையிலிருப்போரின் தாய்மார், இன்னும் சிலர் கைக்குழந்தைகளுடன் வந்திருந்து கதறியழுதனர்.



அவர்களுடன், கையிலிருந்த குழந்தைகளும் அழுதன. அனைவரும் தத்தம் உறவுகளைக் காட்டுமாறு கைக்கூப்பிக் கேட்டுக் கொண்டனர். எனினும், மீதமிருந்த கைதிகளை ஏற்றியிருந்த சிறைச்சாலை பஸ்கள் கடுமையான பாதுகாப்புடன் அங்கிருந்து புறப்பட்டன.

சிறைச்சாலையில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது என்ற தகவல் அறிந்ததும் கைதிகளின் ஏராளமான உறவினர்கள் நேற்றும் சிறைச்சாலைக்கு முன்பாகக் குழுமினர். அவர்கள் தமது உறவுகளைப் பார்க்க அனுமதிக்க வேண்டும் என்று பொலிஸாரின் கால்களில் விழுந்து அழுதமையும் குறிப்பிடத்தக்கது. (ம-22)

## ராஜீவ் கொலை வழக்கு:
## ஆயுள்தண்டனை கைதி முருகன் உணவொறுப்பு

புதுடில்லி, டிசெ. 1

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை அனுபவித்து வரும் முருகன் தனது குடும்பத்தினருடன் உரையாட அனுமதி தரவேண்டும் என்று வலியுறுத்தி மீண்டும் உணவொறுப்பில் ஈடுபட்டு வருகின்றார்.

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் முருகன் வேலூர் ஆண்கள் சிறையிலும், அவருடைய மனைவி நளினி பெண்கள் சிறையிலும் அடைக்கப்பட்டுள்ளனர். கொரோனாத் தொற்று தடுப்பு நடவடிக்கையாக கைதிகளைப் பார்க்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. ஏனைய கைதிகள் காணொளி வழியாக உரையாடி வருகின்றனர். இதே போல முருகன் தனது மனைவியுடன் பேசினார். இந்த நிலையில் மகள், தாயுடன் பேச அனுமதிக்க வேண்டும் என்று முருகன் கடந்த 23ஆம் திகதியில் இருந்து உணவொறுப்பில் ஈடுபட்டு வருகின்றார். (ம-இ)

## 149 இலங்கையர்கள் நாடு திரும்பினார்கள்

கொழும்பு, டிசெ. 1

தொழில் நோக்கத்தில் வெளிநாடுகளுக்கு சென்று நாடு திரும்ப முடியாமல் மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளில் சிக்கியிருந்த 149 இலங்கையர்கள் இன்று காலை நாடு திரும்பியுள்ளனர்.

அதனடிப்படையில் ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து 49 பேர், கட்டாரில் இருந்து 95 பேர் மற்றும் ஜேர்மனியில் இருந்து 5 பேர் இவ்வாறு வருகை தந்துள்ளனர். இவர்கள் அனைவரும் விமான நிலையத்தில் வைத்து பி.சி.ஆர் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு தனிமைப்படுத்தலுக்கும் உட்படுத்தப்பட்டுள்ளனர். (ம)

## எயிட்ஸ் தொற்றைத் தடுப்பதற்கு பொறுப்புடன் செயலாற்றுங்கள்

### *எயிட்ஸ் தின செய்தியில் பிரதமர் கோரிக்கை*

கொழும்பு, டிசெ.1

எயிட்ஸுக்கு எதிராகப் போராடுவதற்கும் தடுப்பதற்கும் நாம் உறுதியாக இருக்க வேண்டியதுடன் அது தொடர்பில் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ச எயிட்ஸ் தின செய்தியில் தெரிவித்துள்ளார்.

'எச்.ஐ.வி. தொற்றை முடிவுக்கு கொண்டுவருதல், எதிர்ப்பு திறன் மற்றும் தாக்கத்தை குறைத்தல்' என்பதே 2020ஆம் ஆண்டின் எயிட்ஸ் தினத்தின் கருப்பொருளாகும். அதற்குத் தேவையான பலம் மனித சமூகத்தினால் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும் என்பதை நினைவுபடுத்துகின்றேன். எச்.ஐ.வி. தொற்றுடைய நபர்கள் சமூகத்தினால் ஒதுக்கப்படாதிருப்பதற்கு, தொற்றாளர்கள் தேவையான சிகிச்சைகளை முறையாக முன்னெடுத்து, நோயைக் கட்டுப்படுத்திக்கொள்ள முடியும். எயிட்ஸ் பாதிப்புக்கு உள்ளாகியுள்ள அனைவரும் அது தொடர்பில் கவனம் செலுத்துவதற்கு இன்றைய தினத்தில் மேற்கொள்ளப்படும் அரசாங்கத்தின் விழிப்பூட்டலை பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன் என பிரதமர் ஊடகப்பிரிவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)



## இரு வேறு குற்றச்சாட்டில் 5 பேர் பொலிஸாரால் கைது!

கிளிநொச்சி, டிசெ.1

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுண்டிக்குளம் சந்திப் பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி மணல் அகழ்ந்த குற்றச்சாட்டில் 4 டிப்பர்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், அவற்றின் சாரதிகளும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தருமபுரம் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய நேற்று மாலை 6 மணியளவில் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை பிரமந்தனாறு பகுதியில் சட்டவிரோத மதுபானம் மற்றும் 6 லீற்றர் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டார்.

கைதுசெய்யப்பட்ட ஐந்து பேரும் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று தருமபுர பொலிஸ் நிலையக் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி சிசெர தெரிவித்தார்.(ற-113)

## அட்டுளுகமவில் 231 தொற்றாளர்கள்

கொழும்பு, டிசெ. 1

தனிமைப்படுத்தப்பட்டுள்ள அட்டுளுகம மற்றும் பண்டாரகம பிரதேசங்களில் கடந்த 15 நாள்களில் 231 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனரென, பண்டாரகம சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் வைத்தியர் ஸ்ரீமலி அமரசிங்க தெரிவித்துள்ளார்.

இதில் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனவும் அவர் தெரிவித்துள்ளார். இதுவரை பண்டாரகம சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மொத்தமாக 310 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (மஇ)

## பிணையில் விடுவிக்கப்பட்டவர்கள் மீண்டும் பொலிஸ் விசாரணையில்

மன்னார், டிசெ.1

சட்டவிரோதமாக மன்னார் ஊடாக இந்தியா சென்று, அங்கிருந்து ஆஸ்திரேலியாவுக்குச் செல்லும் நோக்குடன் சென்றவர்கள் கைதுசெய்யப்பட்டு மன்னார் நீதவான் நீதிமன்றில் பிணையில் விடுவிக்கப்பட்டபோதும் மீண்டும் பொலிஸ் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை மன்னார் நானாட்டன் பகுதியைச் சேர்ந்த ஒரு ஆண், இரு பெண்கள் மற்றும் இரு சிறுமிகள், இரு படகோட்டிகள் உட்பட ஏழு பேர் பேசாலையிலிருந்து இந்தியாவுக்கு சென்றவேளை கடலில் வைத்து கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு பேசாலை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர். விசாரணைகள் பின்னர் மன்னார் மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். இவர்களில் ஐந்து பெரியவர்களையும் தலா ஒரு லட்சம் ரூபா சரீரப் பிணையிலும் இரு சிறுமிகளையும் தங்கள் சொந்தப் பிணையிலும் செல்ல கட்டளை பிறப்பித்த நீதிவான் இவ் வழக்கை எதிர்வரும் 17ஆம் திகதி ஒத்திவைத்தார்

இவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்ட கையோடு முருங்கன் பொலிஸார் இவர்களைப் பொறுப்பேற்று தங்களுடன் அழைத்துச் சென்றுள்ளனர்.

இவர்கள் தங்கள் பகுதியில் குற்றசெயலில் செயல்பட்டுள்ளனர் என தமக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றதைத் தொடர்ந்தே கைதுசெய்யப்பட்டனர் என முருங்கன் பொலிஸார் தெரிவித்தனர். (ந-60)

### கடற்படை முகாம் காணி அபகரிப்பு வழக்கு

# ரவிகரன், சிவாஜி உள்ளிட்டோர் மீதான விசாரணை மே–17க்கு ஒத்திவைப்பு

முல்லைத்தீவு, டிசெ.1

கோத்தாபாய கடற்படை முகாமுக்கு முன்பாக மக்கள் போராட்டத்தில் கலந்துகொண்டதற்காக முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், எம்.கே.சிவிஜிலிங்கம் உள்ளிட்ட நால்வருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கின் விசாரணை நேற்று திங்கட்கிழமை முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இவ் வழக்கு விசாரணை எதிர்வரும் ஆண்டு மே மாதம் 17ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

கடந்த 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி, முல்லைத்தீவு - வட்டுவாகல் பகுதியில், கோத்தாபய கடற்படை முகாமுக்கு முன்பாக இடம்பெற்ற காணி அபகரிப்புக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டதற்காக முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் 2008ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 2ஆம் திகதியன்று முல்லைத்தீவு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருந்த நிலையில், பிணையில் விடுதலையாகியிருந்தார். இதேவேளை,



வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் முன் பிணைகோரி, சட்டத்தரணி ஊடாக பிணையில் வெளிவந்தார்.

அதனைத் தொடர்ந்து இலங்கை தமிழரசுக்கட்சியின் இளைஞர் அணி உறுப்பினர் அன்ரனிஜெகநாதன் பீற்றர் இளஞ்செளியன், முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளன நிர்வாக உறுப்பினர் அன்னலிங்கம் சண்முகலிங்கம் ஆகியோரும் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுதலையாகினர்.

இந் நால்வர் மீதும் தொடரப்பட்ட வழக்கின் விசாரணைகள் கடந்த இரண்டரை வருடங்களுக்கு மேலாக இடம்பெற்றுவரும் நிலையில், நேற்றையதினம் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில், நீதிபதி எஸ்.லெனின்குமார் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. இவ் விசாரணைகளில் நில அளவைத் திணைக்களத்தால் குற்றஞ்சாட்டப்பட்டோர் சார்பில், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், எம்.கே. சிவாஜிலிங்கம், அ.பீற்றர் இளஞ்செளியன் மற்றும் அ.சண்முகலிங்கம் ஆகிய நால்வரும் மன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்து இந்த வழக்குடன் தொடர்புடைய அறிக்கை இன்னும் கிடைக்கப்பெறாமையால், குறித்த வழக்கின் விசாரணைகள் எதிர்வரும் 2021 ஆம் ஆண்டு மே மாதம் 17ஆம் திகதிக்கு தவணையிடப்படுகிறது என நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (ந-246)



## கிராம அமைப்புக்களால் சிரமதானம் முன்னெடுப்பு

வவுனியா, டிசெ.1

வவுனியா பட்டாணிச்சூர் புளியங்களம் கிராம அலுவலகர் பிரிவிலுள்ள பொது கிராம அமைப்புக்கள் ஒன்றிணைந்து சிரமதானத்தை முன்னெடுத்துள்ளனர்.

டெங்கு நுளம்பைக் கட்டுப்படுத்தும் முகமாக நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ள இச் சிரமதானம் ஆறு நாள்கள் முன்னெடுக்கப்படவுள்ளது. நகரசபை ஊழியர்கள் மற்றும் சுகாதாரப் பரிசோதகர்கள் ஆகியோரும் இணைந்து இச் சிரமதானம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதற்கு பொதுமக்கள் தமது பூரண ஒத்துழைப்புக்களை வழங்கி தமது வீடுகளிலுள்ள குப்பைகள், கழிவுகளை, அவற்றை அகற்ற வரும் நகரசபை வாகனத்துக்கு வழங்கி டெங்கு நுளம்பு பெருக்கத்தைக் கட்டுப்படுத்த ஒத்துழைக்குமாறு கிராம அமைப்புக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன. (ந)

## சுற்றுலாத்துறையை மீளவும் ஆரம்பிப்பதற்குப் பேச்சுக்கள்!

கொழும்பு, டிசெ.1

நாட்டில் சுற்றுலாத் துறையை மீண்டும் ஆரம்பிப்பது குறித்த கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

அதன்படி சுகாதார அமைச்சின் கொரோனா மருத்துவ மேலாண்மை நிபுணர் குழு சுற்றுலாத்துறையுடன் இணைந்து அதற்கான வழிகாட்டுதல்களைத் தயாரித்துள்ளது.

இதன்படி அடுத்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் சர்வதேச பயணிகளுக்காக இரு விமான நிலையங்களையும் மீண்டும் திறக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது என இலங்கை சுற்றுலாத் தலைவர் கிமர்லி பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ள அவர், சுகாதார அதிகாரிகளின் ஒப்புதலுக்கான குறித்த வழிகாட்டுதல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. சாதகமான பதிலுக்காகக் காத்திருக்கின்றோம்.

இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் உரிய அறிவுறுத்தல்களின் அடிப்படையில் நட்சத்திர விடுதிகளில் 14 நாள்கள் தனிமைப்படுத்தப்படுவர். தனிமைப்படுத்தலுக்கு முற்பணம் செலுத்துபவர்களுக்கு மட்டுமே நுழைவிசைவு வழங்கத் தீர்மானித்துள்ளோம். இந்த நெறிமுறை சுகாதார அமைச்சால் தொடர்ந்து மதிப்பாய்வு செய்யப்படும். அதேநேரம் ஒரு மாதம் முதல் 6 மாதங்கள் வரையான நுழைவிசைவு வழங்கப்படும். எனினும் இந்தத் திட்டத்துக்கு அமைச்சரவை அனுமதி பெறவேண்டியுள்ளது - என்றார். (ம)

## வாகன விபத்துக்கள் நாட்டில் அதிகரிப்பு

கொழும்பு, டிசெ.1

நாட்டில் கடந்த இரண்டு மாதங்களின் பின்னர் வாகன விபத்துக்கள் அதிகரித்துள்ளன என பொலிஸ் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். கொழும்பில் வைத்து நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

நாட்டில் நேற்று மட்டும் இடம்பெற்ற 6 வாகன விபத்துக்களில் 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

சாரதிகள் மற்றும் பாதசாரிகளின் கவனயீனம் காரணமாகவே இந்த விபத்துக்கள் ஏற்படுகின்றன. என்றார். (ஐ-22)



## கிண்ணியா நகரசபை பட்ஜெட் நிறைவேற்றம்

திருகோணமலை, டிசெ.1

கிண்ணியா நகர சபையின் 2021 ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டம் பெரும்பான்மை வாக்குகளுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்தச் சபை அமர்வானது நேற்று (30) நகர சபையின் விசேட சபை ஒன்றுகூடல் மண்டபத்தில் தவிசாளர் எஸ்.எச்.எம். நளீம் தலைமையில் இடம்பெற்றது.

இதில் பட்ஜெட் வாக்கெடுப்பில் ஆதரவாக எட்டு உறுப்பினர்களும், எதிராக மூன்று உறுப்பினர்களும் என்ற விகிதத்தில் வாக்களிப்பு இடம்பெற்றிருந்தது. இச்சபைக்கு இரு உறுப்பினர்கள் சமூகம் தரவில்லை. இந்த பட்ஜெட் வாக்கெடுப்பில் பெரும்பான்மை வாக்குகளுடன் பட்ஜெட் நிறைவேற்றப்பட்டுள்ளது. (ற-இ)

### தனஞ்சய டி சில்வாவின் தந்தை

# கொலை வழக்கில் ஒருவர் கைது

கொழும்பு, டிசெ.1

பிரபல கிரிக்கட் வீரர் தனஞ்சய டி சில்வாவின் தந்தை ரஞ்சன் டி சில்வா கொலை வழக்கின் பிரதான சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். தர்மசிறி பெரேரா என்ற குறித்த சந்தேகநபர் டுபாயில் வைத்து சர்வதேச பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரி வித்துள்ளார்.

சந்தேகநபர் நேற்று கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

தனஞ்சய டி சில்வாவின் தந்தை ரஞ்சன் டி சில்வா கடந்த 2018 ஆம் ஆண்டு மே மாதம் 24 ஆம் திகதி துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-44)

# கொரோனாவுக்குத் தடுப்பூசி அமெரிக்கா கண்டுபிடித்தது


## 100 சதவீதம் செயல்திறனுடையது

நியூயோர்க், டிசெ. 1

கொரோனாப் பெருந்தொற்றைத் தவிர்க்கக்கூடிய தடுப்பூசியை அமெரிக்கா கண்டுபிடித்துள்ளது. அமெரிக்காவின் மொடேர்னா நிறுவனம் இந்தத் தடுப்பூசியைக் கண்டுபிடித்துள்ளது. இது 100 சதவீதம் பயன்தருகின்றது என்று அந்த நிறுவனம் மேலும் குறிப்பிட்டது.

இதுதொடர்பாக, மொடேர்னா நிறுவனத்தின் தலைமை மருத்துவ அதிகாரி ரால் ஷாக்ஸ் தெரிவித்த தாவது:

எங்களிடம் மிகவும் பயனுள்ள ஒரு தடுப்பூசி இருப்பதாக நாங்கள் நம்புகிறோம். அதை நிரூபிப்பதற்கான தரவு இப்போது எங்களிடம் உள்ளது. இந்த தொற்று நோயைத் தடுப்பதில் எங்கள் தடுப்பூசி முக்கிய பங்கு வகிக்கும் என்று எதிர்பார்க்கிறோம் என்றார். இதையடுத்து எங்களது தடுப்பூசியை அவசர தேவைக்கு பயன்படுத்த அனுமதியளிக்குமாறு அமெரிக்கா




உணவு மற்றும் மருந்து கட்டுப்பாட்டு நிறுவனத்திடமும் ஐரோப்பிய நாடுகளின் சுகாதாரத் துறையிடமும் மொடெர்னா நிறுவனம் அனுமதி கோரியுள்ளது.

ஏற்கனவே ஜெர்மனியின் பயோன்டெக் நிறுவனத்துடன் இணைந்து கொரோனாத் தடுப்பூசியை தயாரித்துள்ள அமெரிக்காவின் பைசர் நிறுவனம் தங்களது தடுப்பூசி கொரோனாவை ஒழிப்பதில் 95 சதவீதம் திறன் வாய்ந்தது என அறிவித்து அதை அவசர தேவைக்கு பயன்படுத்த அனுமதி கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)

---



## கொரோனாவின் உருவாக்கம் அரசியல் வேண்டாம் ஆராய்ச்சி செய்வோம்

### அதானம் கெப்ரேயஸ் தெரிவிப்பு

ஜெனிவா, டிசெ. 1

கொரோனா வைரஸ் எங்கே உருவானது என்ற விடயத்தை அரசியலாக்க வேண்டாம். கொரோனா எங்கு உருவானது என்பதை அறிய நாங்கள் விரும்புகிறோம். அறிவதற்குத் தேவையான சகல விடயங்களையும் நாங்கள் மேற்கொள்வோம் என உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ் தெரிவித்துள்ளார்.

கொரோனா உருவானமை தொடர்பான விசாரணையின் கட்டுப்பாடு சீனாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்ற குற்றச்சாட்டுக்கு பதிலளிக்கும் விதமாகவே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். கொரோனா வைரஸின் தோற்றத்தை உறுதிப்படுத்த நாம் எல்லாவற்றையும் செய்கிறோம். சிலர் இதை அரசியலாக்கி வருகின்றனர்.

எங்கள் நிலை மிகவும் தெளிவாக உள்ளது, நாங்கள் வுகானிடமிருந்து ஆய்வைத் தொடங்குவோம், அங்கு என்ன நடந்தது என்பதை அறிவோம். கண்டுபிடிப்புகளின் அடிப்படையில், வேறு வழிகள் இருக்கிறதா என்று ஆராய்வோம். இந்த வைரஸின் தோற்றத்தை நாம் அறிந்து கொள்ள வேண்டும், இதுவே எதிர்காலத்தில் ஏற்படும் பாதிப்புக்களைத் தடுக்க உதவும் என அவர் மேலும் தெரிவித்தார். (வ)

## எரிமலை வெடித்ததால் 3,000 பேர் வெளியேற்றம்

ஜகார்தா, டிசெ. 1

இந்தோனேசியாவில் ஈஸ்ட் நுஸா மாகாணத்தில் உள்ள ஐல் லெவொடோலாக் என்ற எரிமலை வெடிக்கத் தொடங்கியுள்ளது.

எரிமலையில் இருந்து எழுந்த புகையும், சாம்பலும் சுமார் 4 கிலோ மீற்றர் உயரத்துக்கு விசிறியடிக்கப்பட்டன. இதையடுத்து சுமார் 26 கிராமங்களைச் சேர்ந்த 3 ஆயிரம் பேர் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றுள்ளனர்.

இந்தோனேசியா தீவில் சுமார் 260 மில்லியன் மக்கள் வசிக்கின்றனர். அதன் இருபுறமும் பசுபிக் நெருப்பு வளையம் உள்ளமையால் அங்கு அடிக்கடி இயற்கை இடர்கள் ஏற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (வ)



## இரு மாநிலங்களில் மீண்டும் வாகைசூடினார் ஜோ பைடன்

நியூயோர்க், டிசெ. 1

அரிசோனா, விஸ்கொன்ஸின் மாநிலங்களில் மீள வாக்குகள் எண்ணப்பட்டு வெளியாகிய முடிவுகளின் அடிப்படையில் அங்கு ஜோ பைடன் வெற்றி பெற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் அண்மையில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயக கட்சியின் ஜோ பைடன் வெற்றிபெற்று ஜனாதிபதி பதவிக்கு தகுதி பெற்றுள்ள நிலையில், தற்போதைய ஜனாதிபதி ட்ரம்ப், தேர்தலில் மோசடி நடைபெற்றது எனத் தொடர்ந்து குற்றம்சாட்டிவருகின்றார்.

ஜோர்ஜியா, அரிசோனா, பென்சில்வேனியா, விஸ்கொன்ஸின் ஆகிய மாநிலங்களில் வாக்கு எண்ணிக்கையில் முறைகேடு நடந்துள்ளது எனவு, அங்கு மறுவாக்கு எண்ணிக்கை நடத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினார். ஆனால் இக் குற்றச்சாட்டை தேர்தல் அதிகாரிகள் ஏற்கவில்லை. எனினும் ட்ரம்புக்கும், பைடனுக்கும் இடையிலான வாக்கு வித்தியாசம் குறைந்த அளவில் இருந்த மாநிலங்களில் மட்டும் மறுவாக்கு எண்ணிக்கைக்கு மாநில அரசுகள் உத்தரவிட்டன.

ஏற்கனவே ஜோர்ஜியா மாநிலத்தில் வாக்குகள் மீள எண்ணப்பட்டு பைடனின் வெற்றி உறுதிப்படுத்தப்பட்டிருந்த நிலையில் இன்று அரிசோனா, விஸ்கொன்ஸின் மாநிலங்களிலும் பைடனின் வெற்றி மீள உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (வ-இ)

## கொரோனா நெருக்கடிக்குள் அச்சுறுத்துகிறது மலேரியா

### திணறும் ஆபிரிக்கா

ஜோகன்ஸ்பார்க், டிசெ. 1

கொரோனா பரவலுடன் மலேரியா நோய்த் தாக்கம் ஏற்பட்டுள்ள நிலையில் ஆபிரிக்க வலயத்துக்குள் மரண எண்ணிக்கை அதிகரிக்கலாம் என உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. ஆபிரிக்க வலயத்துக்குள் மலேரியா நோய் பரவல் துரிதமாக அதிகரித்துள்ளது. கொரோனா வைரஸை போன்று மலேரியா நிலைமை



காரணமாகவும் இவ்வலயத்தில் மரண எண்ணிக்கை அதிகரிக்கும் அபாயம் காணப்படுகிறது என உலக சுகாதார அமைப்பு சுட்டிக்காட்டுகின்றது. ஆபிரிக்க வலய நாடுகளின் சுகாதார வசதிகள் குறைந்த மட்டத்தில் காணப்படுவதால் அங்கு நிலைமைகள் பாரதூரமாகலாம்.

மலேரியா ஒழிப்புக்காக ஆபிரிக்க வலய நாடுகளுக்கு வழங்கப்படும் உதவிகளை குறைக்க வேண்டாம் என உலக சுகாதார அமைப்பு உதவியளிக்கும் நாடுகளிடம் கேட்டுக் கொண்டுள்ளது. (வ-இ)

# 'சவாட் கிக் பொக்சிங்' வடக்கிலிருந்து 12 பேர்!

கொழும்பு, டிசெ.1

'ஒஸ்ரியா' நாட்டில் எதிர் வரும் 2021 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள தெற்காசிய கிண்ண 'சவாட் கிக் பொக் சிங்' போட்டிக்கு வடக்கிலி ருந்து 12 பேர் தெரிவுசெய்யப் பட்டுள்ளனர்.

வடக்கு மாகாண சவாட் கிக் பொக்சிங் சங்கத்தின் தலை வரும், தலைமைப் பயிற்றுவிப் பாளருமான எம்.எஸ்.நந்த குமார் தலைமையில் பயிற்சி பெற்ற 12 வீரர்கள் வடக்கி லிருந்து ஒஸ்ரியா நாட்டில் நடைபெறவுள்ள 'தெற்காசிய சவாட் கிக் பொக்சிங்' போட் டிக்கு பயணமாகவுள்ளனர்.

தெற்காசிய சவாட் கிக்பொக்சிங் அமைப்பின் பணிப்பாளரும், பயிற்றுவிப் பாளரும், இலங்கை சவாட் கிக் பொக்சிங் அமைப்பின் தலைவருமான சீ.பூ.பிரசாத் விக்கிரமசிங்க தலைமையில் இலங்கையைப் பிரதிபலித்து சவாட் கிக்பொக்சிங் வீரர்கள் ஒஸ்ரியா நாட்டுக்கு செல்ல வுள்ளனர்.

பாகிஸ்தானில் கடந்த 2020 ஜனவரி நடைபெற்ற இந்த போட்டியில் இலங்கையை பிரதிபலித்து கலந்து கொண்ட வடக்கைச் சேர்ந்த வீரர்களான எஸ்.ஸ்ரீதர்சன், கே.நிரோஜன், பி.ராகுல், வி.வசிகரன், எஸ். சஞ்சயன், ரி.நாகராஜா, ஆர். கே.கெவின் ஆகியோர் இலங் கைக்கு ஏழு பதக்கங்களைப் பெற்றுக் கொடுத்த நிலையில், 2021 ஒஸ்ரியா நாட்டில் நடைபெறவுள்ள தெற்காசிய சவாட் கிக் பொக்சிங் போட் டிகளில் பங்குபற்ற இந்த வீரர்களுடன் மேலும் வடக்கி லிருந்து ஐந்து வீர, வீராங்கனைகள் இலங்கையில் நடைபெற்ற சர்வதேச போட் டியின் மூலமாக தெரிவுசெய் யப்பட்டுள்ளனர்.

எம்.பிரவீந்த், எம்.கிஷாளினி , சி.விதுஷா எம்.கிருபாலினி, டபிள்யு.இமேஷா ஆகிய வீர, வீராங்கனைகளே இவ்வாறு தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இப் போட்டியில் நான்கு பெண் வீராங்கனைகள் பங்கு பற்றவுள்ளனர். வட மாகா ணத்திலிருந்து 3 வீராங்கனை களும், 9 வீரர்களும் பங்கு பற்றவுள்ளனர். (ற-இ)




# ரூ.4 கோடி மோசடி: கார் பந்தய வீரர் கைது!

புதுடில்லி, டிசெ.1

ஏழு முறை தேசிய சம்பியன் பட்டம் வென்ற சென்னை கார்ப்பந்தய வீரர் ரூ.4 கோடி மோசடி வழக்கில் கைது செய்யப்பட்டார்.

பாலவிஜய் (வயது 35) என்ற சென்னை கார்ப் பந்தய வீரரே இவ்வாறு கைது செய்யப்பட் டுள்ளார்.

இவர் சென்னை கோடம்பாக்கம், டிரஸ்ட்புரத்தைச் சேர்ந்தவர். 7 முறை தேசிய அளவில் வெற்றி பெற்றுள்ளார். சர்வதேச கார் பந்தயத்தில் பங்கு பெறும் தகுதியைப் பெற்ற வர்.

அவரைப்போல நிறைய வீரர்களை கார் பந்த யத்தில் பங்குபெறச் செய்தவர். இவ்வாறு கார் பந்தயத்தில் வெற்றிக்கொடிகளை நாட்டி வந்த பாலவிஜய் தற்போது 4 கோடி ரூபா மோசடி வழக்கில் சிக்கி சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

பஞ்சாப் நேஷனல் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி உள்பட 5 வங்கிகளில் அவரது நண்பர் கள் முகமது முசாமில்(வயது34), அய்யாத் துரை(வயது32) ஆகியோருடன் சேர்ந்து போலி வருமான வரிச் சான்றிதழ்களை மேற்படி வங்கிகளில் சமர்ப்பித்து, சுமார் 4 கோடி ரூபா அளவுக்கு கடன் வாங்கி 8 சொகுசு கார்களை வாங்கியுள்ளார்.

சொகுசு கார்களை விற்பதற்கு முயற்சி செய் துள்ளார். ஆனால் அந்த கார்களை விற்க முடிய வில்லை. வங்கிக் கடனை திருப்பிச் செலுத்தா ததால், பஞ்சாப் நேஷனல் வங்கி சார்பில் சென்னை மத்திய குற்றப்பிரிவு பொலிஸில் முறைப்பாடு கொடுக்கப்பட்டது. பொலிஸார் விசாரணை நடத்தி, இந்த மோசடியை வெளிச்சத்துக்கு கொண்டு வந்தனர்.

கார்ப் பந்தய வீரர் பாலவிஜய் நேற்று முன்தி னம் கைது செய்யப்பட்டார். அவருடைய நண்பர்கள் அய்யாத்துரை, முகமது முசாமில் ஆகியோரும் கைதானார்கள். அவர்களிடம் இருந்து 6 சொகுசு கார்கள் பறிமுதல் செய்யப் பட்டன. மேலும் 2 கார்களை மீட்க நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சிறையில் அடைக்கப்பட்ட கார்ப் பந்தய வீரர் பாலவி ஜய் மற்றும் அவரது நண்பர்கள் இருவரையும் பொலிஸ் காவலில் வைத்து விசாரணை நடத்த உள்ளனர். (ற-இ)

# வோர்னர் "அவுட்"



புதுடில்லி, டிசெ.1

இந்திய அணிக்கெதிரான ரி-20 தொடரி லிருந்து ஆஸ்திரேலிய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான டேவிட் வோர்னர் விலகியுள்ளார்.

தற்போது நடைபெற்றுவரும் இரண்டா வது ஒருநாள் போட்டியின் போது களத் தடுப்பில் ஈடுபட்டிருந்த வோர்னருக்கு காயம் ஏற்பட்டது. இதனால் அவர் மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 தொடரிலிருந்து விலகினார். இதற்கு பதி லாக டார்சி ஷோர்ட் அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

எனினும், வோர்னர் எதிர்வரும் இந்திய அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில் விளையாடுவார் என கிரிக்கெட் ஆஸ்திரே லியா நம்பிக்கை வெளியிட்டுள்ளது.(றஇ)




# 22,000 ஓட்டங்கள் கோலி சாதனை

புதுடில்லி, டிசெ.1

சர்வதேச போட்டிகளில் 22 ஆயிரம் ஓட்டங்கள் குவித்து இந்திய அணித் தலைவர் விராட் கோலி சாதனை படைத்துள்ளார்.

கோலி உலகின் தலைசிறந்த துடுப்பாட்ட வீரராக திகழ்கிறார். ஆஸ்திரேலியாவுக்கு எதிராகநேற்று நடந்த ஒருநாள் போட்டியில் விராட் கோலி 87 பந்துகளில், 89 ஓட்டங்கள் (7 நான்கு ஓட்டங்கள், 2 ஆறு ஓட்டங்கள்) எடுத்தார். 78 ஆவது ஓட்டங் களை எடுத்தபோது அவர் சர்வதேச போட்டிக ளில் 22 ஆயிரம் ஓட்டங்கள் மைல் கல்லை தொட்டார்.

டெஸ்ட், ஒருநாள் போட்டி மற்றும் ரி-20 ஆகிய மூன்றிலும் சேர்த்து 22 ஆயிரம் ஓட்டங்களை எடுத் துள்ளார். இந்த ஓட்டங்களை அவர் அதிவேகத் தில் எடுத்து சாதனை படைத்துள்ளார்.(ற-இ)




# 15 சுற்றுகள் முடிவில் ஹாமில்டன் முதலிடம்

லண்டன், டிசெ.1

பார்முலா 1 கார்ப்பந்தயத்தில் இங்கிலாந்து வீரர் லீவிஸ் ஹாமில்டன் முதலிடத்தைப் பிடித்தார். இவர் பந்தய தூரத்தை 2 மணி 59 நிமிடம் 47.515 வினாடியில் கடந்து வெற்றி பெற்றார்.

இந்த ஆண்டுக்கான பார்முலா 1 கார்ப் பந்த யம் 17 சுற்றுகளாக நடத்தப்படுகிறது. இதன் 15 ஆவது சுற்றான பக்ரைன் கிராண்ட்பிரி பந்தயம் அங்குள்ள சகிர் ஓடுதளத்தில் நேற்று முன்தினம் நடந்தது. இதில் 10 அணிகளைச் சேர்ந்த 20 வீரர்கள் காரில் சீறிப் பாய்ந்தனர்.

இதில் கடந்த சுற்றிலேயே உலக சம்பியன்ஷிப் பட்டத்தை உறுதி செய்த இங்கிலாந்து வீரர் லீவிஸ் ஹாமில்டன் (மெர்சிடஸ் அணி) 2 மணி 59 நிமிடம் 47.515 வினாடியில் பந்தய தூரத்தை கடந்து முதலிடத்தைப் பிடித்தார். இந்த சீசனில் அவர் பெற்ற 11 ஆவது வெற்றி இதுவாகும்.

நெதர்லாந்து வீரர் மேக்ஸ் வெர்ஸ்டப்பென் (ரெட்புல் அணி) 1.254 வினாடி பின்தங்கி 2 ஆவது இடத்தையும், தாய்லாந்து வீரர் அலெக்சாண்டர் அல்பான் (ரெட்புல் அணி) 8.005 வினாடி பின்தங்கி 3 ஆவது இடத்தை யும் பெற்றனர். இதுவரை நடந்துள்ள 15 சுற்றுகள் முடிவில் ஹாமில்டன் 332 புள்ளிகளுடன் முதலிடத்தில் நீடிக்கிறார். அடுத்த சுற்றுப் போட்டி எதிர்வரும் 6 ஆம் திகதி பக்ரைனில் நடைபெறவுள்ளது.(றஇ)